**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI**

## O.S. No. 23 /2018

**Date: 10.03.2025**

**வா.சா. 1 போர்மன்னன் த/பெ. கண்ணன்**

**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –**

(1) தாவா சொத்து ரவீந்திரசெட்டியாரின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. ரவீந்திரசெட்டியாருக்கு தாவா சொத்தில் 5 ல் ஒரு பங்கு மட்டுமே இருந்த காரணத்தினால் அவர் தாவா சொத்து சம்மந்தமாக முழுமையாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்க முடியாது என்றும், அவ்வாறு செய்தது மற்ற பாகஸ்தர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது ரவீந்திரசெட்டியாரின் தனிப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் காமினி மற்றும் சுகுணா முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு முடிந்தபின்னர் கிரையம் எழுதி கொடுப்பதாக ரவீந்திரசெட்டியார் சொன்னார். அந்த பாக வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. நான் 08.01.2015 ல் வாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன். 2013 ல் இருந்து ஏற்பட்ட கிரைய ஒப்பந்தங்கள் கட்டாய பதிவு செய்யவேண்டும் என்று சட்டம் உள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் கண்டுள்ள அந்த காலக்கெடுவிற்குள் நான் வாதியிடம் மீதி தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் ஏற்படுத்திக்கொள்ள எழுத்துபூர்வமான முயற்சி எடுத்தேனா என்றால் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். வா.சா.ஆ.2 சட்ட அறிவிப்பு கொடுத்த பிறகு 3 ஆண்டுகளுக்கு பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் எனக்கு கிரையம் செய்து கொடுக்க நான் வற்புறுத்துவதாக கூறி என் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய பிப்ரவரி 2015 ல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தை அனுகி அதன்பேரில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன்பேரில் திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தார் என்னை அழைத்து

விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணைக்கு பலமுறை அழைத்தார்கள் என்றும், நான் இந்த பிரச்சனையை எங்களுக்குள் பேசி தீர்த்துக்கொள்கிறோம் என்று கூறி விசாரணையை தவிர்த்தேன் என்றால் சரியல்ல. என்னை பிரதிவாதிகள் அலைக்கழித்தாலும் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி என்னை போலீசார் விசாரணையில் ஆஜராக நிர்பந்தம் செய்ததாலும் அவர்கள் மீது கோபம் கொண்டு முன்தேதியிட்டு தாவா கிரைய ஒப்பந்தத்தை நான் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் இருப்பது ரவீந்திரசெட்டியாரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2) அந்த ஒப்பந்தத்தில் அப்பாவு மகன் சேகர் என்பவரும், கிருஷ்ணன் மகன் குமார் என்பவரும், முருகேசன் மகன் கோதண்டராமன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள். அந்த சாட்சிகள் மூவரும் நான் ஏற்பாடு செய்த நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. ரவீந்திரசெட்டியார் அவர்கள் தான் அவர்களை அழைத்து வந்தார். ஒப்பந்தம் ஏற்பட்டபோது ரவீந்திரசெட்டியாரின் குடும்ப உறுப்பினர்கள் யாரும் அந்தசமயத்தில் இல்லை. தாவா ஒப்பந்தமே உண்மையானது அல்ல என்றும், அது உண்மையென கருதினாலும் ரவீந்திரசெட்டியாருக்கு பாத்தியப்பட்ட பங்குக்கு மட்டும் தான் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/- B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**